**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2021**

---

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2021 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரமே இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

---

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனமும் அந் நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்க வேண்டும். அச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளால் பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினனால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அச்சட்டத்தின் 38(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலப்பகுதிக்கள் தயாரிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும் மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள்**

---

இறுதியாக சபையால் தயாரிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| **நிதிக்கூற்று விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| <u>சொத்துக்கள்</u> | **ரூபா** |
| நடைமுறையல்லாச் சொத்து | 1,569,049,227 |
| நடைமுறைச் சொத்து | 6,501,271,386 |
| மொத்த சொத்துக்கள் | <u>8,070,320,613</u> |

| | |
|---|---|
| <u>உரிமை மற்றும் பொறுப்புக்கள்</u> | |
| உரிமை | (14,179,929,345) |
| <u>பொறுப்புக்கள்</u> | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 10,049,541,444 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 12,200,708,514 |
| மொத்த பொறுப்புக்கள் | (22,250,249,958) |
| மொத்த பொறுப்புக்கள்/ மூலதனம் | <u>8,070,320,613</u> |
| மொத்த வருமானம் | 396,551,485 |
| மொத்த செலவினம் | 1,281,334,002 |
| புற்றாக்குறை | <u>884,782,517</u> |

**2.2 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணகள் 257 மற்றும் 139 (8,10) | கொடுப்பனவிற்காக பணம் செலுத்தும் அதிகாரியிடம் சமர்ப்பிக்க முன் அனைத்து உறுதிச்சீட்டுக்களும் வவுச்சர்களும் சான்றளிக்கப்பட வேண்டிய போதிலும், ஒவ்வொரு கொடுப்பனவுகளையும் முறையான ஆவணங்களில் பதிவு செய்து கணக்கு வைப்பதற்கும், பணப்புத்தகத்தின் இருப்பை வங்கி அறிக்கையுடன் சரியான இடைவெளியில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் கொடுப்பனவு அதிகாரி பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படவில்லை. |
| **(ஆ)** | நிதிப்பிரமாணம் 395 | வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 வது நாளுக்கு முன்பாக வங்கி இணக்கக்கூற்றைத் தயாரிக்க வேண்டிய போதிலும் சபை 2020 ஆம் வருடம் முதல் வங்கி இணக்கக்கூற்றுக்களைத் தயாரிக்கவில்லை. |

**2.3 முற்பணக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் முற்பணப் பதிவேட்டின்படி, 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கொடுக்கப்பட்ட முற்பணங்களில், 2022 செப்டம்பர் 13 வரை நிலவரப்படி ரூபா 1,059,115 ஆன முற்பணம் தீர்க்கப்படவில்லை. அதில் 2016 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 60,000 உம், 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 611,415 ஆன மீதியும் இருந்தது.

(ஆ) சபையினால் வெளியிடப்பட்ட 2015 ஏப்ரல் 22 ஆம் திகதிய PMB/F1/14/2015 ஆம் இலக்க உள்ளக "குறிப்பு" மூலம கடமைகளுக்காகப் பெறப்பட்ட முற்பணம் பெற்ற நாளிலிருந்து 07 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மேற்படி முற்பணத்தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) நெல் சந்தைப்படுத்தல் சபையில் பல்வேறு பதவிகளை வகிக்கும் 19 அதிகாரிகள் ஒழுக்கமின்மை காரணமாக கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். அந்த வகையில் ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 01 தொடக்கம் 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும் விசாரணைகள் முடிவடையவில்லை. அது தொடர்பான மேலதிக ஆய்வுகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதி முகாமையாளரின் முறைகேடுகள் காரணமாக சபைக்கு ரூபா 312,662,925 இழப்பு ஏற்பட்டதால் 2015 மார்ச் 20 அன்று அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்ததடன் அவர் மீது 77 குற்றச்சாட்டுகள் உள்ளன. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 7 வருடங்களுக்கு மேலாகியும் விசாரணைகள் முடிக்கப்பட்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவகற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதி முகாமையாளர் செயற்பாடுகள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ரூபா 112,500,000 இழப்பை ஏற்படுத்தியதாக 14 குற்றச்சாட்டுகளின் காரணமாக 2019 மே 08 அன்று கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டிருந்ததுடன், 2020 சனவரி 7 இல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தும் மீண்டும் 2021 சனவரி 25 இல் மீண்டும் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டார். இருப்பினும், கணக்காய்வுத் திததி வரை விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மூன்று உத்தியோகத்தர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டு அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருவதுடன் விசாரணை நடவடிக்கைகள் 02 வருடங்களாகியும் விரைவாக முடிக்கப்படாத காரணத்தால், அதிகாரிகளுக்கு சம்பளமாக ரூபா 7,306,327 வழங்கப்பட்டிருந்தது.

(iv) நெல் களஞ்சியங்களில் நெல் இருப்பு கணக்கெடுப்பில் கண்டுபிடிக்கப்பட்ட நெல் இருப்பு குறைந்ததால் இரண்டு அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தும் அந்த அதிகாரிகள் தற்போது பணியாற்றி வருகின்றதுடன் அவர்களின் ஆரம்ப விசாரணைகள் கணக்காய்வுத் திகதியான 2022 அக்டோபர் 10 வரையில் முடிக்கப்படவில்லை.

(v) முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவடைந்த போதிலும், ஐந்து அதிகாரிகளிடம் இருந்து ரூபா 41,749,524 சபைக்கு அறவிடப்பட வேண்டமென கூறப்பட்ட போதிலும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(vi) 2019 செப்டம்பர் 30 ஆம் திகதிய 30/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் ஒழுக்காற்று விசாரணை உடனடியாக முடிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2022 செப்டெம்பர் 06 வரையில் 19 அதிகாரிகளுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்குவகற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நெல் சந்தைப்படுத்தல் சபையில் காணப்பட்ட 13 வாகனங்களில் 03 வாகனங்கள் மட்டுமே இயங்கும் நிலையில் உள்ளதுடன், இயங்காத 10 வாகனங்களில் 04 வாகனங்கள் பழுதுபார்க்க திட்டமிடப்பட்டு 02 ஆண்டுகளாக பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தும் 2020 அக்டோபர் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துகள் முகாமைத்துவம் சுற்றறிக்கையின் (ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்,

மேற்படி சுற்றறிக்கையின் (அ) பந்தியின் பிரகாரம் இயக்க முடியாத பழுதடைந்த வாகனங்களும் அப்புறப்படுத்தப்படவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019/2020 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ் நெல்லை கொள்வனவு செய்வதற்காக ரூபா 4780 மில்லியன் அடமானக் கடனாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் நெல் சந்தைப்படுத்தல் சபை கடன்களை பெற்றிருந்தது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி மாவட்டச் செயலாளர்கள் சிறு நெல் விற்பனை நிலைய உரிமையாளர்கள் மூலம் நெல்லைக் கொள்வனவு செய்திருந்ததுடன் சபையினாலும் நெல்லைக் கொள்வனவு செய்திருந்தனர்.மாவட்டச் செயலாளர்களுக்கு நெல் கொள்வனவுக்காக ரூபா 1,897,000,000 மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காக ரூபா 3,462,525 வழங்கப்பட்டதுடன், ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாவட்டச் செயலர்களுக்குப் பணம் கொடுக்கும்போது, அதற்கான ஒப்பந்தம் அல்லது கடன் தொகையை விரைவில் தீர்த்து வைப்பது தொடர்பான நிபந்தனைகள் எதுவும் இருக்கவில்லை. அதன் பிரகாரம் விற்ற பணத்தை தாமதமின்றி தீர்ப்பதற்கும் மற்றும் கொள்முதல் விலையை விட அதிக விலைக்கு விற்கப்படும் சந்தர்ப்பங்களில் சபை இலாபம் பெறும் வகையில் அமைப்புகளைத் தயாரிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனினும் 05 மாவட்டச் செயலாளர்கள் மாத்திரம் கொடுத்த பணத்தில் வாங்கி அதிக விலைக்கு விற்றதன் மூலம் கிடைத்த இலாபமான ரூபா 20,671,012 ஐ சபைக்கு செலுத்தியிருந்தனர்.

(ii) நெல் வாங்குவதற்காக 16 மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் 69 சதவீதம் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் மீதி 31 சதவீதமான ரூபா 592,170,678 ஆன தொகை திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. பணத்தை அனுப்ப 2 ½ மாதங்கள் முதல் 8 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டதால், சபை எடுத்த கடனுக்காக வங்கிக்குச் செலத்தப்பட்ட வட்டி ரூ.10,695,492 ஆக இருந்தது. முறையான திட்டம் இல்லாததால், வட்டிக்கு வாங்கிய கடன் பணம் பயன்படுத்தப்படாததால் செலுத்த வேண்டிய வட்டி விளைவற்ற செலவொன்றாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2019/20 பெரும்போகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக சபை பெற்ற கடன் தொகை ரூபா 4,780,000,000 ஆகும். அதற்காக 2022 செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை ரூபா 4,020,915,545 ரூபா தீர்க்கப்பட்டிருந்ததுடன், 02 வருட காலமாக கடனைத் தீர்ப்பதன் காரணமாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 381,758,768 ஆகும். இது கடனின் சதவீதமாக 9.49 சதவீதமாக இருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2022 செப்டெம்பர் 10 வரையில் கடன் தொகையில் ரூபா 759,084,455 செலுத்த வேண்டியிருந்ததுடன் 2022 செப்டெம்பர் 14 ஆம் திகதியில் அதற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 31,112,064 ஆக இருந்ததுடன் வட்டி செலுத்தப்பட்டமை தாமதமானதால் 2022 செப்டெம்பர் 14 ஆம் திகதியில் வங்கிக்கு செலுத்த வேண்டியேற்பட்ட தண்டக்கட்டணம் ரூபா 923,076 ஆகும்.

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2021 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டத்தின்படி, நெல் களஞ்சியங்களை மேம்படுத்துவதற்கும் நவீனப்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 175 மில்லியன் ஒதுக்கீட்டில், 35 நெல் களஞ்சியங்களின் நவீனமயமாக்கலுக்கு ரூபா 35.5 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. நவீனமயமாக்கப்பட்ட களஞ்சியசாலைகளில் 07 களஞ்சியசாலைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு அதன் கொள்ளளவு 7100 மெற்றிக் தொன்களாக இருந்தபோதிலும் 561 மெற்றிக்தொன்கள் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்ததால் 92 சதவீதமான கொள்ளளவானது பயன்படுத்தப்படாமல் இருந்தது.

**(ஆ)** நெல் சந்தைப்படுத்தல் சபையின் மொத்த சேமிப்புத் திறன் 317,530 மெட்ரிக் தொன் ஆக இருந்ததுடன் 2020/21 பெரும் போகத்தில் கொள்வளவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நெல் அளவு 300,000 மெ.தொ என்றாலும், 45,124 மெ.தொ மட்டுமே கொள்வளவு செய்யப்பட்டது, இதனால் சேமிப்புத் திறனில் 14 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ)** 2021 சிறு போகத்தில் கொள்வளவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படும் நெல் அளவு 50,000 மெ.தொ மற்றும் கொள்வளவு செய்யப்பட்ட 7,728 மெட்ரிக் தொன்களில் 2.4 சதவீதம் மட்டுமே சேமிப்புத் திறனில் பயன்படுத்தப்பட்டது..